ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி
திருப்பனந்தாள் – 612504
S.K.S.S ARTS COLLEGE, THIRUPPANANDAL - 612504





# வினாவங்கி

தாளின் தலைப்பு

# சமய இலக்கியம்

**CORE COURSE V II B.LIT**

**பாடக்குறியீடு : 16LCCLT5**

**பருவம் III**

தயாரித்தவர்



**முனைவர் ம.புவனேஸ்வரி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை

## CORE COURSE V

## சமய இலக்கியம்

பாட நோக்கம்

1. சமயம் சார்ந்த இலக்கியங்களை அறிமுகப்படுத்தல்.
2. சமய இலக்கியங்களுக்கு இடையே நிலவும் பொதுத் தன்மைகளைத் தெளிவுபடுத்தல்.
3. சமய இலக்கியங்கள் வலியுறுத்தும் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளை உணர்த்துதல்.

**மாணவர் பெறும் திறன்**

1. காலந்தோறும் பக்தி இலக்கியம் வளர்ந்து வந்துள்ள வரலாற்றை அறிவர்.
2. பல்வேறு சமயக் கோட்பாடுகளை அறிவர்.
3. அனைத்துச் சமயங்களும் வலியுறுத்தும் மனிதம் ஒன்றே என்பதை உணர்வர்.

**அலகு - 1** **1. திருஞானசம்பந்தர் - தேவாரம் - திருநள்ளாற்றுப் பதிகம்** 20 மணி

'போகமார்த்த பூண்முலையாள்' எனத் தொடங்கும் பாடல் முதல் 11 பாடல்கள்

**2. திருநாவுக்கரசர் - தேவாரம் - தனிதிருத்தாண்டகம்**

'அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ' எனத் தொடங்கும் பாடல் முதல் 10 பாடல்கள்

**3. சுந்தரமூர்த்தி - தேவாரம் - திருப்புன்கூர் பதிகம்**

'அந்தணாளன் உன் அடைக் கலம் புகுத' எனத் தொடங்கும் பாடல் முதல் 10 பாடல்கள்

**அலகு - 2** **1. திருவாசகம் - திருச்சாழல்** 20 மணி

'பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்' எனத் தொடங்கும் பாடல் முதல் 20 பாடல்கள்

**2. திருவருட்பா - முதல் திருமுறை**

'திருஓங்கு புண்ணியச் செயல் ஓங்கி அன்பருள்' எனத் தொடங்கும் பாடல் முதல் 10 பாடல்கள்

20 மணி

**அலகு - 3** **1. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் - திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி**

'வாடினேன் வாடி வருந்தினேன்' எனத் தொடங்கும் பாடல் முதல் 10 பாடல்கள்

**2. குலசேகர ஆழ்வாரின் - பெருமாள் திருமொழி - விற்றுவக் கோட்டமான்**

தருதுயரம் தடியேல் எனத் தொடங்கும் பாடல் முதல் 10 பாடல்கள்

**அலகு - 4 மஸ்தான் சாகிபு பாடல்கள்** 15 மணி

பராபரக் கண்ணி - முதல் 50 கண்ணிகள்

**அலகு - 5 இரட்சணிய யாத்திரிகம்** 15 மணி

இரட்சணிய சரிதப்படலம் - சிலுவைப்பாடு

**பார்வை நூல்கள்**


1. சோ.ந.கந்தசாமி - திருமுறை இலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. மு.இராகவையங்கார் - ஆழ்வார்கள் காலநிலை, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
3. தா.ஈசுவரப்பிள்ளை - பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. பெ.சு.மணி - பக்தி இலக்கியங்கள் வழியே சமூகச் சீர்திருத்தம் ஓர் அறிமுகம், பூங்கொடி பதிப்பகம், மயிலாப்பூர், சென்னை.
5. மயிலை சீனி வேங்கடசாமி - கிறிஸ்தவமும் தமிழும், பாரி நிலையம், சென்னை.
6. முனைவர் ம.மு.உவைஸ், பீ.மு.அஜ்மல்கான் - இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு - தொகுதி-1, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.


**இணைய முகவரிகள்**

1. www.tamilheritage.org
2. www.thehistoryofsrivaishnavam.wwbly.com
3. www.shaivam.org
4. http://siddique.my/Tamil.html
5. http://www.sheikhagar.org/articles/muslimumma/276-islamicliterature
6. http://islamintamil.forumakers.com/t121-topic
7. http://johnson11mcc.blogspot.in/2014/08/blog-post_70.html
8. www.tamilaaivu.com
9. www.tamilvu.org

# அலகு – 1
## பகுதி – அ

❖ **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. திருஞானசம்பந்தர் அருளியவை
   அ) திருக்கடைக்காப்பு
   ஆ) தேவாரம்
   இ) திருவாசகம்
   ஈ) பனுவல்

2. அனல்வாதம் நடைபெற்ற இடம்
   அ) சீர்காழி
   ஆ) திருநள்ளாறு
   இ) ஆலவாய்
   ஈ) தில்லை

3. சிவபெருமான் மதியோடு உடன் சூடியுள்ள மாலை
   அ) தாமரை
   ஆ) கொன்றை
   இ) கடம்பு
   ஈ) பாரிஜாதம்

4. பன்னிரு திருமுறைகளுள் திருநாவுக்கரசர் அருளியவை
   அ) 1, 2, 3
   ஆ) 2, 3, 4
   இ) 4, 5, 6
   ஈ) 7, 8, 9

5. திருநாவுக்கரசரின் வேறு பெயர்
   அ) மருள்நீக்கியார்
   ஆ) வாகீசர்
   இ) அப்பர்
   ஈ) மேற்கண்ட அனைத்தும்

6. அருநோய்கள் கெட அணிய வேண்டுவது
   அ) வெண்ணீறு
   ஆ) உருத்திராக்கம்
   இ) சந்தனம்
   ஈ) கொன்றைமாலை

7. வெய்ய --------- பைய நையும்.
   அ) வறுமை
   ஆ) வினைப்பகை
   இ) பிறவி

ஈ) நோய்

8. சேரமான் தோழர் என்று அழைக்கப்படுபவர்

அ) அப்பர்

ஆ) திருஞானசம்பந்தர்

இ) சுந்தரர்

ஈ) வாகீசர்

9. தாதை தாளற எறிந்தவர்

அ) ஏயர்கோன்

ஆ) மார்க்கண்டேயர்

இ) சேரமான்

ஈ) சண்டேசர்

10. முற்பிறவியில் சிலந்தியாக இருந்தவர்

அ) கோச்செங்கணான்

ஆ) ஏயர்கோன்

இ) கணம்புல்லர்

ஈ) சாக்கியர்

**விடைகள்** 1.**அ** 2.**இ** 3.**ஆ** 4.**இ** 5.**ஈ** 6.**அ** 7.**ஆ** 8.**இ** 9.**ஈ** 10.**அ**

## பகுதி - ஆ

## ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. பச்சைப் பதிகம் என்று சுட்டப்படுவது எது?

12. திருநள்ளாற்றீசர் தம் கைகளில் எவற்றைப் பற்றியுள்ளதாகத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்?

13. திருஞானசம்பந்தர் புறச்சமயத்தவர்களை எங்ஙனம் சாடுகின்றார்?

14. சிவபெருமான் தாழ்சடையில் தாங்கியுள்ளவை எவை?

15. தாண்டகம் என்னும் யாப்பு வகையை அருளியவர் யார்?

16. இருவகை நிதிகளின் பெயர்களைச் சுட்டுக.

17. உண்பதன்முன் செய்ய வேண்டுவது யாது?

18. அந்தணாளன் என்று சுந்தரரால் குறிப்பிடப்படுபவர் யார்?

19. திருப்புன்கூர்ப் பதிகத்தில் சுந்தரரால் சுட்டப்படும் நாயன்மார்கள் இருவரைக் குறிப்பிடுக.

20. சிவபெருமான் யாருக்குப் பாசுபதம் அருளினார்?

## பகுதி – இ

### ❖ விரிவாக விடையளி

21. திருநள்ளாறு தலச்சிறப்பு குறித்து விளக்குக.
22. திருநள்ளாற்றுப் பதிகத்தின் தனிச்சிறப்புகளை எடுத்துரைக்க.
23. அடியார்கட்குச் சிவபெருமான் எங்ஙனம் அருள்செய்வதாகத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்?
24. அனைத்து உறவுகளும் சிவபெருமானே என்பதைத் திருநாவுக்கரசர் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?
25. “காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே” என்று முடியும் திருத்தாண்டகத்தின் பொருளை விளக்குக.
26. எவையெல்லாம் ஊரல்ல என்பதைத் திருத்தாண்டகத்தின் வழி எடுத்துரைக்க.
27. “அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே” என்னும் திருநாவுக்கரசரின் கூற்றினை விவரி.
28. “வையகம் முற்றும் மாமழை மறந்து” என்னும் சுந்தரர் பாடலில் கூறப்படும் நிகழ்வினைப் புலப்படுத்துக.
29. இலங்கையர்கோனுக்குச் சிவபெருமான் எங்ஙனம் அருளியதாகச் சுந்தரர் குறிப்பிடுகின்றார்?
30. திருப்புன்கூர்த் தலச்சிறப்பினை எடுத்துரைக்க.

## பகுதி – ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. சிவபெருமானின் திருவுருவச் சிறப்பினைத் திருநள்ளாற்றுப் பதிகத்தின் வழி விளக்குக.
32. திருஞானசம்பந்தர் பதிகத்தின் வழித் திருநள்ளாற்று இறைவனின் பெருமைகளை விவரிக்க.
33. திருநள்ளாற்றுப் பதிகம் குறிப்பிடும் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.
34. திருநாவுக்கரசர் தனித்திருத்தாண்டகத்தில் குறிப்பிடும் செய்திகளைத் தொகுத்துரைக்க.
35. “பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே” என்றும் “எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே” என்றும் திருநாவுக்கரசர் குறிப்பிடுவனவற்றை ஆய்க.
36. தனித்திருத்தாண்டகத்தின் வழிச் சிவபெருமானின் பெருமைகளையும் திருநாவுக்கரசரின் பக்திச் சிறப்பினையும் புலப்படுத்துக.

37.திருப்புன்கூர்ப் பதிகத்தில் இடம்பெறும் புராணச் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

38. சுந்தரர் குறிப்பிடும் நாயன்மார்களைப் பற்றி விவரிக்க.

39. சிவபெருமானின் திருவருளைப் பெற்றவர்களாகச் சுந்தரர் யாரையெல்லாம் நினைவு கூர்கின்றார்? விவரிக்க.

40. சிவபெருமான் அடியார்களுக்கு அருளும் பாங்கினைத் திருப்புன்கூர்ப் பதிகத்தின் வழி ஆய்க.

## அலகு – 2

## பகுதி – அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. பன்னிரு திருமுறைகளுள் திருவாசகம் அமைந்துள்ள திருமுறை

அ) 7
ஆ) 8
இ) 10
ஈ) 11

2. திருவாசகத்தில் எத்தனை பகுதிகள் உள்ளன

அ) 51
ஆ) 50
இ) 52
ஈ) 54

3. திருச்சாழல் என்னும் பகுதி இடம்பெற்றுள்ள நூல்

அ) திருவருட்பா
ஆ) தேவாரம்
இ) திருக்கோவையார்
ஈ) திருவாசகம்

4. திருச்சாழல் --------- கூற்றாக அமைந்துள்ளது

அ) சிவபெருமான்
ஆ) மாணிக்கவாசகர்
இ) பெண்கள்
ஈ) தலைவன்

5. சிவபிரானுக்குரிய கோயில்

அ) சுடுகாடு
ஆ) கயிலாயம்
இ) திருப்பெருந்துறை
ஈ) தில்லை

6. சலமுகத்தால் அவன்சடையில் பாய்ந்தவள்

அ) உமையம்மை
ஆ) கங்கை
இ) தாட்சாயணி
ஈ) பார்வதி

7. திருவருட்பாவை அருளியவர்
அ) மாணிக்கவாசகர்
ஆ) அப்பர்
இ) தாயுமானவர்
ஈ) இராமலிங்க சுவாமிகள்

8. தெய்வமணிமாலை என்னும் பகுதி அமைந்துள்ள திருமுறை
அ) 2
ஆ) 1
இ) 4
ஈ) 3

9. கந்தகோட்டம் என்று வள்ளலார் குறிப்பிடும் கோயில் அமைந்துள்ள தலம்
அ) பழனி
ஆ) சுவாமிமலை
இ) சென்னை
ஈ) திருத்தணி

10. ------------------ என்னும் ஒருபாவி
அ) கயமை
ஆ) வஞ்சகம்
இ) அழுக்காறு
ஈ) மனம்

**விடைகள்** 1.ஆ 2.அ 3.ஈ 4.இ 5.அ 6.ஆ 7.ஈ 8.ஆ 9.இ 10.ஈ

## <u>பகுதி - ஆ</u>

### ❖ <u>ஓரிரு சொற்களில் விடையளி</u>

11. சிவபெருமான் பூணும் ஆபரணம் எது?
12. சிவபெருமானால் தலை அறுக்கப்பட்டவர்களைக் குறிப்பிடுக.
13. சிவபெருமானுடைய உடை மற்றும் பதியினைச் சுட்டுக.
14. சிவபெருமான் உகந்து ஏறிய வாகனம் எது?
15. திருமாலுக்கு ஆழி அருளியவர் யார்?

16. நான்மறையின் உட்பொருள் யாருக்கு உரைக்கப்பட்டது?
17. சைவசமயத்தின் முப்பொருளைக் குறிப்பிடுக.
18. “கனவினும் மறந்தும் மதியேன்” என்று வள்ளலார் யாரைக் குறிப்பிடுகின்றார்?
19. ததி என்பதன் பொருளைச் சுட்டுக.
20. மூன்று அவத்தைகள் யாவை?

## பகுதி – இ

### ❖ விரிவாக விடையளி

21. திருச்சாழல் அமைப்பும் சிறப்பும் குறித்து விளக்குக.
22. சிவபெருமானால் தண்டிக்கப்பட்டவர்களைப் பற்றிக் குறிப்பிடுக.
23. சிவபெருமான் ஆலாலம் உண்ட நிகழ்வினை எடுத்துரைக்க.
24. திருமால் ஆழிபெற்ற நிகழ்வினைத் திருச்சாழல் வழி விளக்குக.
25. சிவபெருமான் “பெரும் பித்தன்” என்று சுட்டப்பட்டதன் காரணத்தையும் அதற்குக் கூறப்பட்ட மறுமொழியையும் தெளிவுபடுத்துக.
26. சென்னைக் கந்தகோட்டத்தின் சிறப்புகளை விளக்குக.
27. எவர் தன்னைப் பற்றிடாமல் இருக்கவேண்டும் என்று இராமலிங்க சுவாமிகள் வேண்டுகிறார்?
28. கந்தவேளின் பெருமைகளைத் தெய்வமணிமாலையின் வழி விவரி.
29. “எள்ளளவும் இம்மொழியிலேசு மொழியன்று” என்று வள்ளலார் குறிப்பிடுவதனைத் தெளிவுபடுத்துக.
30. தெய்வமணிமாலையின் அமைப்பையும் சிறப்புகளையும் எடுத்துரைக்க.

## பகுதி – ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. திருச்சாழலின் அடிப்படையில் சிவபெருமானின் இயல்புகளைத் தொகுத்துரைக்க.
32. மாணிக்கவாசகர் திருச்சாழலில் குறிப்பிடும் புராண நிகழ்வுகளை விவரி.
33. உலகைக் காக்கச் சிவபெருமான் மேற்கொண்ட அருளிப்பாடுகளைப் புலப்படுத்துக.
34. திருச்சாழலில் இடம்பெறும் தடைகளையும் அதற்குரிய விடைகளையும் கட்டுரைக்க.
36. கந்தகோட்டத்துப் பெருமானின் திருவடிச் சிறப்புகளை எடுத்துரைக்க
37. கயவரைக் கூடாது அருள் செய்ய வேண்டுமென்று வள்ளலார் எங்ஙனம் வலியுறுத்துகிறார்?

38. கந்தகோட்டத்துப் பெருமான் சொல்லரிய நல்ல துணையாக விளங்குவதனை வள்ளலாரின் வாய்மொழி கொண்டு விளக்குக.
39. சுத்தாவத்தையாகிய பேற்றினைப் பெற வள்ளலார் எங்ஙனம் இறைஞ்சுகின்றார்?
40. வள்ளலார் கந்தவேளிடம் எவையெல்லாம் வேண்டுமென்று பட்டியலிடுகின்றார்?

## அலகு – 3

## பகுதி – அ

❖ **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. பெரிய திருமொழியை அருளியவர்
    அ) ஆண்டாள்
    ஆ) குலசேகர ஆழ்வார்
    இ) பெரியாழ்வார்
    ஈ) திருமங்கையாழ்வார்
2. திருமங்கையாழ்வாரின் மனைவி
    அ) குமுதவல்லி
    ஆ) அமுதவல்லி
    இ) வேதவல்லி
    ஈ) மரகதவல்லி
3. தமிழ் இலக்கண மரபிற்கு முரணாகத் திருமங்கையாழ்வார் பாடியது
    அ) உலா
    ஆ) தூது
    இ) மடல்
    ஈ) கோவை
4. தூவிசேர் அன்னம் துணையொடும் புணரும் புனல் சூழ்ந்த தலம்
    அ) திருவரங்கம்
    ஆ) குடந்தை
    இ) திருவேங்கடம்
    ஈ) திருச்சேறை
5. நம்முடை வினைக்கு ---------- தான் கண்டீர் நாராயணா என்னும் நாமம்
    அ) நஞ்சு
    ஆ) வாள்
    இ) இறுதி
    ஈ) பகை
6. பெருமாள் திருமொழியை அருளியவர்
    அ) திருமங்கையாழ்வார்
    ஆ) பெரியாழ்வார்

இ) நம்மாழ்வார்
ஈ) குலசேகர ஆழ்வார்

7. குலசேகர ஆழ்வார் --------- நாட்டு மன்னர்
அ) சோழ
ஆ) சேர
இ) பல்லவ
ஈ) பாண்டிய

8. “விற்றுவக் கோட்டு அம்மான்” என்று விளிக்கப்படுபவர்
அ) சிவபெருமான்
ஆ) விநாயகர்
இ) திருமால்
ஈ) முருகன்

9. தார்வேந்தன் ----------- நோக்கி வாழும் குடிகள்
அ) கோல்
ஆ) திறம்
இ) அறிவு
ஈ) வாள்

10. வெங்கதிரோனைக் கண்டு அலர்வது
அ) முல்லை
ஆ) அல்லி
இ) செங்கமலம்
ஈ) குவளை

**விடைகள்** 1.ஈ 2.அ 3.இ 4.ஆ 5.அ 6.ஈ 7.ஆ 8.இ 9.அ 10.இ

## பகுதி – ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. திருமங்கையாழ்வார் அருளிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
12. ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களின் தொகுப்பு யாது?
13. நாள்கள் எவ்வாறு கழிந்தன என்று திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார்?
14. பன்றியாய் அன்று பாரகம் கீண்டவர் யார்?
15. திருமங்கை நாட்டின் வளத்தினைச் சுட்டுக.
16. குலசேகர ஆழ்வார் அருளிய பாசுரங்களின் தொகுப்பு யாது?
17. இராமாயணச் சொற்பொழிவைக் கேட்டுப் போருக்கு எழுந்தவர் யார்?

18. யாருடைய சரணல்லால் சரணில்லை என்று குலசேகர ஆழ்வார் பாடுகின்றார்?

19. வாளால் அறுத்துச் சுடுபவர் யார்?

20. வான் மறந்த காலத்துப் பைங்கூழ்கள் எதனைப் பார்க்கும்?

## பகுதி – இ

## ❖ விரிவாக விடையளி

21. திருமங்கையாழ்வார் பற்றிக் குறிப்பு வரைக.
22. பெரிய திருமொழியின் அமைப்பை விளக்குக.
23. "நாவினாலுய்ய நான் கண்டுகொண்டேன்" என்று திருமங்கையாழ்வார் கூறுவனவற்றை எடுத்துரைக்க.
24. "சொற்பொருளாளீர்" என்று விளித்துத் திருமங்கையாழ்வார் குறிப்பிடுவன யாவை?
25. நாராயண நாமம் எவற்றையெல்லாம் நல்கும் என்று திருமங்கையாழ்வார் நவில்கிறார்?
26. குலசேகர ஆழ்வார் பற்றிக் குறிப்பு வரைக.
27. விற்றுவக்கோட்டு அம்மானின் சிறப்புகளை எடுத்துரைக்க.
28. தாயும் குழவியும் பற்றிய உவமையைக் கூறி, குலசேகர ஆழ்வார் குறிப்பிடுவனவற்றை விளக்குக.
29. "வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே" – விளக்கம் தருக.
30. "தருதுயரம் தடாயேல்" என்னும் பாசுரத்தின் இறுதிப் பாடலில் இடம்பெறும் செய்திகளை விவரி.

## பகுதி – ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பற்றிக் கட்டுரை வரைக.
32. பன்னிரு ஆழ்வார்களைக் குறிப்பிட்டுத் திருமங்கையாழ்வார் பற்றி விவரிக்க.
33. நாராயண நாமத்தின் சிறப்புகளைத் தொகுத்துரைக்க.
34. திருமங்கையாழ்வார் தனது பாசுரத்தில் தன்னைப் பற்றி எவ்வாறெல்லாம் எடுத்துரைக்கின்றார்?
35. திருமாலின் பெருமைகளைத் திருமங்கையாழ்வார் பாசுரத்தின் வழி விவரிக்க.
36. திருமங்கையாழ்வார் பாசுரம் உணர்த்தும் செய்திகளை வகைப்படுத்தி விளக்குக.

37. குலசேகர ஆழ்வாரின் பக்திச் சிறப்பினை ஆய்க.
38. “தருதுயரம் தடாயேல்” என்று தொடங்கும் பாசுரத்தில் அமைந்துள்ள உவமை நயங்களை எடுத்தியம்புக.
39. திருமாலின் அருளைப் பெற, குலசேகர ஆழ்வார், தாம் எவ்வாறெல்லாம் முயல்வதாகப் பாடியுள்ளார்?
40. விற்றுவக்கோட்டு அம்மான்” பாசுரம் மூலம் அறியலாகும் செய்திகளைக் கட்டுரைக்க.

## அலகு - 4
## பகுதி – அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. மஸ்தான் சாகிபு பிறந்த ஊர்
    அ) குணங்குடி
    ஆ) புதுக்குடி
    இ) சிறுகுடி
    ஈ) காட்டூர்
2. மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர்
    அ) அகமது அலி
    ஆ) சுல்தான் அப்துல் காதிர்
    இ) காதர் முகம்மது
    ஈ) முகமது சலீம்
3. மஸ்தான் சாகிபு பிறந்த ஆண்டு
    அ) 1790
    ஆ) 1791
    இ) 1792
    ஈ) 1793
4. மஸ்தான் சாகிபுவின் சீடர்களில் ஒருவர்
    அ) நடேச சாஸ்திரி
    ஆ) அப்துல் ரஹூம்
    இ) பீர் முகம்மது
    ஈ) சரவணப் பெருமாள் ஐயர்
5. குணங்குடியார் பெற்ற பட்டம்
    அ) ஆலிம்
    ஆ) ஃபாசில்
    இ) மரைக்காயர்
    ஈ) சுல்தான்
6. குணங்குடியாரைப் போற்றி நான்மணிமாலை இயற்றியவர்
    அ) ஆற்காடு நவாப்

ஆ) ஐயாசாமி
இ) சரவணப் பெருமாளையர்
ஈ) சபாபதி முதலியார்

7. தேடக் கிடைக்காத திரவியமே என்று குணங்குடியார் பாடுவது
அ) பராபரத்தை
ஆ) குரானை
இ) ஞானத்தை
ஈ) முத்தியை

8. நாற்றச் சடலம் என்பது
அ) பிறவி
ஆ) உடம்பு
இ) வாழ்க்கை
ஈ) துன்பம்

9. நின்மலமாய் என்பதன் பொருள்
அ) மலம் மிக்கதாய்
ஆ) ஒளிமயமாய்
இ) மலமற்றதாய்
ஈ) கருணை வடிவாய்

10. "கடலும் மலையும் திரிந்தும் காணேன்" என்று சுட்டப்படுவது
அ) திருவடி
ஆ) இறைதரிசனம்
இ) ஞானம்
ஈ) வீடுபேறு

**விடைகள்** 1.அ 2.ஆ 3.இ 4.ஈ 5.அ 6.இ 7.அ 8.ஆ 9.இ 10.அ

## பகுதி – ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. மஸ்தான் சாகிபு இயற்றிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
12. பராபரக் கண்ணியின் ஆசிரியர் யார்?
13. "கண்டு மகிழ்ந்திடவே காட்டாய்" என்று குணங்குடியார் எதனை வேண்டுகிறார்?
14. "அனியாயம் ஆவதுனக்கு அழகோ" – பொருள் தருக.
15. வம்பரின் செயல் யாது?
16. அடக்க அரிதானது எது?
17. சோற்றுப்பொதி என்று மஸ்தான் சாகிபு எதனைக் குறிப்பிடுகிறார்?

18. கோலத் திருவடிவு எதனால் ஆலைக்கரும்பு போல் ஆனது?
19. நெல்லும் பதரும் என நின்றவர் யார்?
20. கண்மணிக்குள் அரும்பொருளாய் நின்றது யாது?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. குணங்குடி மஸ்தான் சாகிபு பற்றிக் குறிப்பு வரைக.
22. பராபரக் கண்ணியின் அமைப்பையும் சிறப்பையும் புலப்படுத்துக.
23. உடம்பைப் பற்றிக் குணங்குடியார் கூறுவனவற்றைத் தொகுக்க.
24. "ஆரிருந்தும் பலன் ஆமோ பராபரமே" விவரிக்க.
25. "வாடிக் கலங்குகிறேன் வாராய்" என்று குணங்குடியார் இரங்கிப் பாடுவதனை விளக்குக.
26. காற்றுத் துருத்தி என்று சுட்டப்படுவது யாது? அதன் காரணத்தைத் தெளிவுபடுத்துக.
27. "ஓதி உனையறிந்தார் உண்டோ" – இக்கூற்றை விவரிக்க.
28. அல்லும் பகலும் எதற்கு ஆசைப்படுவதாகக் குணங்குடியார் எடுத்துரைக்கின்றார்?
29. "பித்தனாய் ஏன்காண் பிறந்தேன்" என்று குணங்குடியார் எதனை எண்ணிப் புலம்புகின்றார்?
30. மஸ்தான் சாகிபு தன்னை மறந்து எதனைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுகின்றார்?

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. பராபரக் கண்ணியின் மூலம் மஸ்தான் சாகிபுவின் நிலையைப் புலப்படுத்துக.
32. சாகிபு இறைவனிடம் எவ்வாறெல்லாம் இறைஞ்சுகின்றார் என்பதைத் தெளிவுபடுத்துக.
33. இறைவனின் திருவடியை அடைய வேண்டி மஸ்தான் சாகிபு உரைப்பனவற்றை விவரிக்க.
34. பராபரக் கண்ணியில் அமைந்துள்ள உவமைகளின் நயங்களை வெளிப்படுத்திக் கட்டுரை வரைக.
35. குணங்குடியார் தன்னைப் பற்றிக் கூறுவனவற்றை ஆய்க.
36. இறைவனின் இயல்புகளைப் பராபரக்கண்ணி எங்ஙனம் எடுத்தியம்புகின்றது? விளக்குக.
37. பராபரக்கண்ணியில் மஸ்தான் சாகிபு அமைத்துள்ள உருக்கமான முறையீடுகளைப் புலப்படுத்துக.

38. தனக்கு அருள் செய்ய வருமாறு மஸ்தான் சாகிபு இறைவனை எவ்வாறெல்லாம் அழைக்கிறார்?
39. பராபரக்கண்ணியால் அறியலாகும் செய்திகளைக் கட்டுரைக்க.
40. குணங்குடியார் இறைவன் மீது கொண்ட பற்றினைப் பராபரக்கண்ணியின் வாயிலாக வெளிப்படுத்துக.

# அலகு – 5

## பகுதி - அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. சிலுவைப்பாடு எனும் பகுதி இடம்பெற்றுள்ள நூல்
   அ) இயேசு காவியம்
   ஆ) இரட்சணிய மனோகரம்
   இ) அருள்வேட்டல்
   ஈ) இரட்சணிய யாத்திரிகம்

2. இரட்சணிய யாத்திரிகத்தை இயற்றியவர்
   அ) கிருஷ்ணப் பிள்ளை
   ஆ) வீரமாமுனிவர்
   இ) கண்ணதாசன்
   ஈ) ஜி.யு.போப்

3. இரட்சணிய யாத்திரிகத்தில் ------------ பருவங்கள் உள்ளன.
   அ) 3
   ஆ) 4
   இ) 5
   ஈ) 6

4. இரட்சணிய சரிதப்படலம் இடம்பெற்றுள்ள பருவம்
   அ) ஆதிபருவம்
   ஆ) குமாரபருவம்
   இ) இரட்சணியப் பருவம்
   ஈ) ஆரணிய பருவம்

5. சிலுவைப்பாடு ------------ பாடல்களைக் கொண்டது.
   அ) 122
   ஆ) 125
   இ) 128
   ஈ) 126

6. எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு பாராட்டப் பெற்றார்
   அ) கிறித்துவச் சூரியன்
   ஆ) கிறித்துவமாலை

இ) ஞானவாரிதி

ஈ) கிறித்துவக்கம்பர்

7. கிறித்தியானுக்கு இயேசுபிரானின் வரலாற்றைக் கூறுபவர் ---------- என்னும் தூய கன்னிகை

அ) சிநேகிதி

ஆ) யூகி

இ) விவேகி

ஈ) பக்தி

8. ஆகடியம் என்பதன் பொருள்

அ) ஏளனப்பேச்சு

ஆ) வெகுண்டு பேசுதல்

இ) இரங்கிப் பேசுதல்

ஈ) வாழ்த்திப் பேசுதல்

9. மாதருக்குள் ஆசிபெற்ற மங்கலை

அ) யூகி

ஆ) விவேகி

இ) அன்னை மரியாள்

ஈ) கதீஜா

10. இயேசுபிரானை, "மாண்டார் உயிரளிக்கும் மாமருந்து" என்று போற்றியவர்

அ) அன்னை மரியாள்

ஆ) வளன்

இ) யூதாசு

ஈ) நகரமக்கள்

**விடைகள்** 1.ஈ 2.அ 3.இ 4.ஆ 5.அ 6.ஈ 7.ஈ 8.அ 9.இ 10.ஈ

## பகுதி – ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. ஹெச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளையின் முழுப்பெயரைக் குறிப்பிடுக.

12. கிருஷ்ணப்பிள்ளை இயற்றிய நூல்களைச் சுட்டுக.

13. இரட்சணிய யாத்திரிகத்தில் சிலுவைப்பாடு எந்தப் பருவம் மற்றும் படலத்தில் அமைந்துள்ளது?

14. கிறித்துவக் கம்பர் என்று போற்றப்படுபவர் யார்?

15. இயேசுபிரானைக் காட்டிக் கொடுத்தவன் பெயரைக் குறிப்பிடுக.

16. "இவர் பிழையை மன்னியும்" என்று இயேசுபிரான் யாரைக் குறிப்பிடுகின்றார்?

17. "உலகுக்கு இனி இவரே இரட்சகர்" என்று இயேசுபிரானைச் சுட்டுவதன் காரணம் யாது?

18. "அன்னாய் இவனுன் மகன்" என்று இயேசுபிரான் யாரைக் குறிப்பிடுகின்றார்?

19. இயேசுபிரான் தண்ணீர் வேண்டியபோது எதனைத் தந்தனர்?

20. "சீவனின் அதிபதி" என்று சுட்டப்படுபவர் யார்?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. இரட்சணிய யாத்திரிகம் பற்றி விளக்குக.
22. ஹெச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை பற்றிக் குறிப்பு வரைக.
23. கண்ணீரோடு பின்தொடர்ந்த மகளிரிடம் இயேசுபிரான் உரைத்தவற்றைக் குறிப்பிடுக.
24. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை இகழ்ந்துரைத்த கள்வனின் நிலை பற்றி விளக்குக.
25. இயேசுபிரானைத் துன்புறுத்தியபோது எங்கும் இருள் சூழ்ந்த நிலை பற்றி எடுத்துரைக்க.
26. இயேசுபெருமான் தண்ணீர் கேட்டபோது நிகழ்ந்தவற்றைப் புலப்படுத்துக.
27. யோசேப்பு பிலாத்துவிடம் இயேசுவின் உடலைப் பெற்று அடக்கம் செய்தமை பற்றிக் குறிப்பிடுக.
28. இயேசுபிரான் "முடிந்தது" என்று கூறியதன் பொருளைத் தெளிவுபடுத்துக.
29. "மனுவாகி உயிர்விடுத்த விந்தையைப் போல் விந்தையுண்டோ?" பொருள் தெளிவுபடுத்துக.
30. யோவான் மரியன்னைக்கு மகனாக மாறியமை பற்றி எடுத்துரைக்க.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. இயேசுபெருமான் கல்வாரி மலையை நோக்கிச் சென்றமை பற்றி விவரி.
32. இயேசுபிரானின் நிலைகண்டு நகர மகளிரும் மற்ற மக்களும் புலம்பிக் கூறியவற்றைக் கட்டுரைக்க.
33. கொலைக்களத்தில் நிகழ்ந்தவற்றைத் தொகுத்துரைக்க.
34. இயேசுபிரான் உயிர்விட்டபின் நிகழ்ந்தவைகளைச் சிலுவைப்பாட்டின் வழி விளக்குக.
35. இயேசுபிரான் எங்ஙனம் உயிர்த்தெழுந்தார்? விவரிக்க.
36. சிலுவைப்பாடு எடுத்துரைக்கும் செய்திகளைத் தொகுத்துக் கட்டுரை வரைக.

37. இரட்சணிய யாத்திரிகத்தில் சிலுவைப்பாடு எனும் பகுதி சிறப்படைந்ததன் காரணங்களை ஆய்க.

38. கிருஷ்ணப்பிள்ளை கிறித்துவக் கம்பர் என்று போற்றப்பட்டமைக்குச் சிலுவைப்பாடு எங்ஙனம் சான்றாகின்றது? ஆய்க.

39. சிலுவைப்பாட்டின் வாயிலாகக் கிருஷ்ணப் பிள்ளையின் சமயப் பற்றினை எடுத்துரைக்க.

40. கிருஷ்ணப் பிள்ளையின் மொழி ஆளுமைக்கும் தமிழ்ப்புலமைக்கும் சிலுவைப்பாட்டிலிருந்து சான்றுகள் காட்டி நிறுவுக.

S.K.S.S. ARTS COLLEGE
THIRUPPANANDAL
EDUCATION IS WEALTH